கொடுக்கப்பட்ட குறிப்புகளுக்கு ஏற்ற முடிவுரை பத்திகளைத் தேர்ந்தெடுத்து வரிசைப்படுத்தவும்.

| நூல் நிலையத்தின் பயன்கள் | கற்பது - அவசியம் - பொது அறிவை - பருவத்தே - இளமையில் கல் |
|---|---|

| சுற்றுப்புறத் தூய்மையின் அவசியம் | சுற்றுப்புறத் தூய்மை - மக்களின் - பொறுப்பு - கடமையாகப் போற்ற - சுத்தம் சுகம் தரும் |
|---|---|

| இணையத்தின் நன்மை தீமைகள் | பல நன்மைகள் - அல்லவை நீக்கி - நல்லவற்றையே பெற |
|---|---|

நாம் வசிக்கும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருப்பது மக்களின் பொறுப்பாகும். அவ்வகையில் சுற்றுப்புறத் தூய்மையைக் கடைப்படிப்பது நமது தலையாய கடமைகளாக போற்ற வேண்டும். சுத்தம் சுகம் தரும் என்பதற்கேற்ப நம் சுற்றுப்புறத்தின் தூய்மையின் அவசியத்தை உணர்ந்து செயல்பட வேண்டும்.

நூல் நிலையம் என்பது கல்வி கற்கும் இடமாகும். கல்வி என்பது ஒவ்வொரு மனிதர்களுக்கும் மிகவும் முக்கியமான ஒன்றாகும். நூல் நிலையத்தின் புத்தகங்களை வாசிக்கும் போது நமது பொது அறிவு வளரும் என்பது உறுதி. குழந்தை பருவத்தில் கற்கும் கல்வியானது இளமையில் வரை துணைபுரியும். எனவே, பயிலும் பருவத்தில் நூல் நிலையங்களுக்குச் சென்று கல்வி அறிவை பெற்று பல பயன்களை அடையலாம்.

இந்நவீன காலத்தில் இணையமின்றி யாவரும் வாழ்ந்திட இயலாது. இணையத்தின் வழி நன்மை தீமைகள் என இரண்டும் உள்ளது. இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன. இணையத்தை முறையாகப் பயன்படுத்தி தேவையற்றதை நீக்கி நல்லவற்றதை அணுகி பல நன்மைகளைப் பெற இயலும்.

LIVEWORKSHEETS

கொடுக்கப்பட்ட தலைப்புக்கு ஏற்ற முடிவுரை தொடர்பான வாக்கியங்களைத் தேர்ந்தெடுத்து வரிசைப்படுத்துக.

## காலம் பொன் போன்றது.

ஒரு முறை கடந்து சென்றால் மீண்டும் பெற முடியாதது காலம். காலத்தை ஒவ்வொரு மனிதரும் பொன் போன்று பயன்படுத்துவர்.

ஆகவே, நாம் அனைவரும் காலத்தை பொன் போல் பயன்படுத்தும் போது பல வெற்றிகள் நம்மை வந்து சேரும்.

காலத்தை நாம் ஒரு போதும் தவற விடக்கூடாது. நாம் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப்போடாது உடனுக்குடன் காலத்தோடு செய்து முடிக்க வேண்டும்.

## வளர்ப்புப் பிராணிகள்.

இறைவனின் படைப்புகளில் ஒன்றானது பிராணிகள். மனிதர்கள் அனைவருக்கும் தங்களுக்குப் பிடித்த வளர்ப்புப் பிராணிகள் இருக்கும்.

வளர்ப்புப் பிராணிகளை நாம் அன்புடன் வளர்க்க வேண்டும். அவை நம் வீட்டின் செல்வங்களாக வளர்க்கப்பட வேண்டும்.

பலர் வளர்ப்புப் பிராணிகளை தங்களின் குழந்தைகள் போல் பராமரித்து வருகின்றனர். இது நமது மனித நேயத்தை வளர்க்க உதவுகிறது.

## பசுமை போற்றுவோம்.

பசுமையை நாம் போற்றி பேணி காக்கும் போது நமக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. தூய்மையான காற்று மற்றும் கண்களுக்கு இதமான சூழல்கள் யாவும் பசுமையைப் போற்றும் போது நமக்கு கிடைக்கக் கூடியவையாகும். ஆகவே, நாம் நமது இயற்கையின் பசுமையை பேணி காத்து போற்ற வேண்டும்.

கண்ணுக்கு குளிர்ச்சியாக அமைவது பசுமையான சுற்றுச்சூழலாகும். ஒரு வீட்டிற்கு ஒரு மரம் என்பதன் வழி நாம் பசுமையைப் பேணலாம்.

LIVEWORKSHEETS